dc. D.No. 1524/2025
Date. 10/10/2025

# செங்கல்பட்டு மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு

## ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம், செங்கல்பட்டு

அறிவிப்பு நாள்.10.10.2025

**சட்டம் சார்ந்த தன்னார்வலராக**
**பணியாற்ற விண்ணப்பங்கள் வரவேற்க்கப்படுகின்றன**

செங்கல்பட்டு மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் காஞ்சிபுரம், ஆலந்தூர், தாம்பரம், மதுராந்தகம், திருக்கழுக்குன்றம், உத்திரமேரூர், ஸ்ரீபெரும்புதூர், பல்லாவரம், செய்யூர் மற்றும் திருப்போரூர்ஆகிய ஊர்களில் இயங்கும் வட்ட சட்டப்பணிகள் குழுவிற்கு சட்டம் சார்ந்த தன்னார்வலராக சேவை புரிய கீழே குறிப்பிட்டுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

- ஆசிரியர்கள்(ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் உட்பட)
- ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் மற்றும் மூத்தகுடிமக்கள்
- சமூகப் பணியில் முதுநிலைக் கல்வி பயிலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள்
- அங்கன்வாடிப் பணியாளர்கள்
- மருத்துவர்கள்/உடல் நல நிபுனர்கள்
- மாணவர்கள் மற்றும் சட்டக்கல்லூரி மாணவர்கள்(அவர்கள் வழக்கறிஞராகப் பதிவுசெய்யும் வரை)
- அரசியல் சார்பற்ற அரசு சாரா சமூக சேவை நிறுவனங்கள் மற்றும் சங்கப் பிரமுகர்கள்
- மகளீர் குழுக்கள், மைத்ரிசங்கங்கள் மற்றும் வறியோரை உள்ளடக்கிய சுய உதவிக் குழுக்கள் ஆகியவற்றின் உறுப்பினர்கள்
- மாவட்ட/வட்ட சட்டப்பணிகள் தன்னார்வ சட்டப்பணியாளர்கள் பணிக்கு பொருத்தமாக கருதும் நபர்.

| | | |
|---|---|---|
| 1 | இதர தகுதிகள் | சட்டம் சார்ந்த தன்னார்வர்கள் இரக்கம்,ஏனையவரின் உணர்வுகளை புரிந்து கொள்ளும் தன்மை, கலப்படமற்ற தூய்மை ஆகிய அடிப்படை மனித குணங்களின் மீது ஒன்றி இருத்தல். எவ்வித பணப் பயனும் எதிர் பார்க்காமல் தன்னார்வ சேவை புரிதல். தங்கள் பணிகளில் இருந்து வருமானத்தை எதிர் நோக்காதவர்களாகவும், ஆனால் சமூகத்தின் பலவீனமான பிரிவினர்,வறியவர் ஆகியோரை மேலுயர்துவதற்கான உறுதியும், உணரும் திறனும் உள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வயது | | 18 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும் |
| மதிப்பூதியம் | | வேலை பணிபுரியும் முழு நாள் ஒன்றுக்கு ரூபாய் 750/- மதிப்பூதியமாக வழங்கப்படும். |
| விண்ணப்பிக்க கடைசி நாள் | | 24.10.2025 மாலை 05.00 மணிக்குள் |

செங்கல்பட்டு மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவில், ஆலந்தூர் வட்ட சட்டப்பணிகள் குழுவில், திருக்கழுக்குன்றம் வட்டச் சட்டப்பணிகள் குழுவில், தாம்பரம் வட்டச் சட்டப்பணிகள் குழுவில், காஞ்சிபுரம் வட்டச் சட்டப்பணிகள் குழுவில் உத்திரமேரூர் வட்ட சட்டப்பணிகள் குழுவில், ஸ்ரீபெருமந்தூர் வட்ட சட்டப்பணிகள் குழுவில், பல்லாவரம் வட்ட சட்டப்பணிகள் குழுவில், செய்யூர் வட்ட சட்டப்பணிகள் குழுவில், திருப்பேரூர் வட்ட சட்டப்பணிகள் குழுவில் சேர்த்து 50 நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர். விருப்பமுள்ளவர்கள் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ விண்ணப்பத்தை நிரப்பி, பதிவு தபாலில் கீழே கண்ட முகவரிக்கு 24.10.2025 அன்று மாலை 05.00 மணிக்குள் அல்லது அதற்கு முன்பாக கிடைக்கப் பெறுமாறு அனுப்பக் கோரப்படுகிறது. 24.10.2025 மாலை 05.00 மணிக்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

| விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி: |
|---|
| செயலாளர், <br> மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, <br> மாற்றுமுறை தீர்வு மையம், <br> ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம், செங்கல்பட்டு - 603 001 |

மேற்படி சட்டம் சார்நத தன்னார்வலர்களுக்கு கடமை சேவை மட்டுமே அன்றி இது உத்தியோகம் இல்லை. மேலும் இந்த சேவை தற்காலிகமானது மற்றும் அதற்கு ஊதியம் எதுவும் இல்லை சேவைக்கு தகுந்த மதிப்பூதியம் மட்டும் அளிக்கப்படும் என்பது தெரிவிக்கப்படுகிறது. நேர்காணல் தேதி மற்றும் இடம் அக்டோபர் 24ம் தேதிக்கு முன் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாராருக்கு தொலைபேசி அழைப்பு மூலமாகவோ அல்லது குறுஞ்செய்தி (SMS) மூலமாகவோ தெரிவிக்கப்டும். மற்ற விவரங்களுக்கு செங்கல்பட்டு மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு அலுவலகத்தையோ அல்லது அருகில் உள்ள வட்ட சட்டப்பணிகள் குழுவையோ அணுகவும்.

விண்ணப்பத்தினை செங்கல்பட்டு மாவட்ட நீதிமன்றத்தின் பின்வரும் இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். **https://chengalpattu.dcourts.gov.in**

தலைவர் / மாவட்ட முதன்மை நீதிபதி
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு
செங்கல்பட்டு

இடம்: செங்கல்பட்டு
நாள் : 10.10.2025

# செங்கல்பட்டு மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு

## சட்டம் சார்ந்த தன்னார்வலர்கள் சேர்க்கை - 2025

Passport Size Photograph to be affixed

| | | |
|---|---|---|
| 1 | பெயர் (பெரிய எழுத்துக்களில்)<br>Name (In Capital Letter) | |
| 2 | பாலினம் /Sex | ஆண் / பெண் / திருநங்கை<br>(Male / Female /Transgender) |
| 3 | வயது /Age | |
| 4 | தகப்பனார்/கணவர் பெயர்<br>Father Name's / Husband Name | |
| 5 | கல்வி தகுதிகள்<br>Education Qualifications | |
| 6 | தொழில் சார்ந்த கல்வி தகுதிகள்<br>Technical Education qualifications | |
| 7 | சாதி மற்றும் பிரிவு<br>Community / Caste | |
| 8 | மதம் / Religion | |
| 9 | அலுவலகம் விலாசம் /Address | |
| 10 | வசிப்பிட விலாசம் / Residential Address | |
| 11 | தொழில் / Occupation | |
| 12 | தொலைபேசி / Telephone No. | |
| 13 | கைப்பேசி எண் / Mobile No. | |

| | | |
|---|---|---|
| 14 | எப்பகுதியில் சட்டம் சார்ந்த தன்னார்வலராக சேவை செய்ய விரும்புகிறீர்கள்<br>Place in which willing to work as Para Legal Volunteer<br>மார்க் செய்யவும் /Tick in the appropriate Column | செங்கல்பட்டு / Chengalpattu |
| | | காஞ்சிபுரம் / Kancheepuram |
| | | தாம்பரம் /Tambaram |
| | | ஆலந்தூர் / Alandur |
| | | மதுராந்தகம் / Madhuranthakam |
| | | திருக்கழுக்குன்றம் / Thirukazhukundram |
| | | ஸ்ரீபெரும்புதூர் / Sriperumbuthur |
| | | உத்திரமேரூர் / Uthiramerur |
| | | பல்லாவரம் / Pallavaram |
| | | செய்யூர் / Cheyyur |
| | | திருப்போரூர் / Thiruporur |
| 15 | தாங்கள் ஏற்கனவே சட்டம் சார்ந்த தன்னார்வலராக பணிபுரிந்திருந்தால் விவரம் மற்றும் செய்த பணிகள் குறித்து தெரிவிக்கவும்<br>Whether you have already worked as Para Legal Volunteer? If so, details or Service rendered to be stated | |
| 16 | குற்ற வழக்குகளில் எதேனில் நீவிர் சம்மந்தப்பட்டவராக இருந்தால், அதன் விவரம் | |
| 17 | மேலும் தாங்கள் தெரிவிக்கும் தகவல்கள்<br>Other Informations , if any | |

நாள் / Date:

இடம் / Place:

விண்ணப்பதாரரின் கையெழுத்து

Signature of the Applicant

மேற்கண்ட விபரங்கள் உண்மையென உளமாற உறுதி கூறுகிறேன்.

குறிப்பு: சட்டம் சார்ந்த தன்னார்வலர் பணி நிரந்தர பணி அல்ல. தற்காலிகமானது மற்றும் அதற்கு ஊதியம் எதுவும் கிடையாது, சேவைக்கு தகுந்த மதிப்பூதியம் மட்டும் அளிக்கப்படும். பணி நிரந்தரம் செய்ய உரிமை எதுவும் நான் கோர முடியாது என்பதை நான் அறிந்துக் கொண்டேன்.

விண்ணப்பதாரரின் கையெழுத்து

Signature of the Applicant